

சிமெண்ட் உற்பத்தியில் பசுமைப் புரட்சி...

THE RAMCO CEMENTS LIMITED

வீடென்பது செங்கற்களால் அடுக்கி வைக்கப்பட்ட வெறும் கட்டிடமல்ல; அன்பும் பண்பும் புரிதலும் ஒருவருக்கொருவர் உதவி செய்தலும் என அனைத்தும் கலந்து கட்டிய கலைவடிவே... வீடு. வீடென்பது வசிப்பதற்கான இடம் மட்டுமல்ல; மனம் அமைதி கொள்ள, உளமாற மகிழ, தேடிவரும் உறவுகளையும் நட்பையும் உபசரிக்க, நம் சந்ததியினை வளர்த்தெடுக்க... என அனைத்திற்குமான அன்னை மடியே வீடு.

தாயாய், தாரமாய், உறவாய், நட்பாய் இருக்கும் வீடு... பல தலைமுறைகளையும் இணைக்கும் உறவுப் பாலம். இந்த உறவுப் பாலத்தின் நீடித்த உழைப்பிற்கு வலு சேர்க்கும் சக்தி படைத்தது ராம்கோ சிமெண்ட்.

அதிக வலிமை படைத்த, சுற்றுச்சூழலுக்கும் பாதுகாப்பான சிமெண்ட் என்றால் அது ராம்கோ சிமெண்ட் தான்.

சிமெண்ட் தயாரிப்பில் இந்தியாவின் முன்னோடி நிறுவனமான தி ராம்கோ சிமெண்ட்ஸ் லிமிடெட், உயரிய தொழில்நுட்பம், அதிநவீன எந்திரங்கள் மற்றும் அனுபவம் வாய்ந்த சிறந்த தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டு, சர்வதேச தரத்தில் 'ராம்கோ சூப்பர் கிரேடு' சிமெண்டினை தயாரித்து வழங்குகிறது.

2018-19-ல் நிறுவனம் பெற்றுள்ள விருதுகள்

இந்தியப் பசுமை உற்பத்திச் சபை - 2018

இந்தியப் பசுமை உற்பத்திச் சபை - 2018 நிகழ்வில் ராம்கோ அரியலூர் தொழிற்சாலை "தங்கப் பதக்கம்" வென்றது. உற்பத்திக்கான சர்வதேச ஆய்வு மையம் [International Research Institute for Manufacturing] என்ற அமைப்பால் தொடங்கப்பட்ட விருது இது.

200 முதல் 600 வரை என்ற அளவுகோலில் 591.7 என்ற பசுமை உற்பத்தி பாராமீட்டர் மதிப்பெண்ணுடன் தங்கப் பதக்கம் வாங்கிய ஒரே தென்னிந்திய நிறுவனம் ராம்கோ அரியலூர் தொழிற்சாலைதான்.

இந்திய பசுமை உற்பத்தி சபை - 2018 நிகழ்வில் ராம்கோ நிறுவனத்தின் ராமசாமி ராஜா நகர், ஜெயந்திபுரம், மற்றும் அரியலூர் தொழிற்சாலைகளும் "வெள்ளிப் பதக்கங்கள்" வென்றன. இதே நிகழ்வில் ராம்கோ நிறுவனத்துக்கு "மிகச் சிறந்த கார்ப்பரேட் நிர்வாக விருது" [Excellent Corporate Governance Award] வழங்கப்பட்டது.

பசுமைப் பொருள் சான்றிதழ்

இந்தியத் தொழில் கூட்டமைப்பின் பசுமைப் பொருட்கள் மற்றும் சேவைகள் கவுன்சில் ராம்கோ நிறுவனத்தின் முக்கியத்துவம் வாய்ந்த தயாரிப்பான ராம்கோ சூப்பர்கிரேட், போர்ட்லேண்ட் போஸோலானா சிமெண்டுக்கான கிரீன்ப்ரோ சான்றிதழை [GreenPro Certification] புதுப்பித்திருப்பதோடு அது ஒரு பசுமைப் பொருள் என்று உறுதிசெய்துள்ளது. இந்தச் சான்றிதழுக்கு 2020 டிசம்பர் வரை மதிப்பு உண்டு.

2016 அக்டோபரில் ராம்கோவின் இந்தத் தயாரிப்புக்கு இந்த சான்றிதழ் வழங்கப்பட்டது. தனது தயாரிப்புக்கு கிரீன்ப்ரோ சான்றிதழ் பெற்ற முதல் சிமெண்ட் நிறுவனங்களில் ராம்கோவும் ஒன்று.

ஆற்றல் செயல்திறன் விருதுகள்

ஹைதராபாத்தில் இந்தியத் தொழில் கூட்டமைப்பால் நடத்தப்பட்ட ஆற்றல் மேலாண்மையில் மிகச் சிறந்த பணிக்கான தேசிய விருதுகள் 2018 [ஆற்றல் செயல்திறன் மாநாடு] நிகழ்வில் நடந்த தேசிய அளவிலான போட்டியில் ராமசாமி ராஜா நகர், ஆலத்தியூர் மற்றும் அரியலூர் தொழிற்சாலைகளுக்கு "மிகச் சிறந்த ஆற்றல் செயல்திறன் தொழிற்சாலை" விருது வழங்கப்பட்டது. இந்த மூன்று தொழிற்சாலைகளும் மிகச் சிறந்த ஆற்றல் செயல்திறன் தொழிற்சாலை" விருதை தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகளுக்கு வென்றதால் அவற்றுக்கு "தேசிய ஆற்றல் முன்னோடி" [National Energy Leader] விருதும் வழங்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் மேலாண்மை மற்றும் பருவநிலை மாற்றத்துக்கான 20வது உலக மாநாட்டில் புது டெல்லியின் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டைரக்டர்ஸ் என்ற அமைப்பால் நிறுவப்பட்ட "ஆற்றல் செயல்திறனுக்கான தங்க மயில் விருது" [Golden Peacock Award for Energy Efficiency] ஆலத்தியூர் தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டது. இன்ஸ்டிட்யூட் ஆஃப் டைரக்டர்ஸ் அமைப்பின் தலைவரும் இந்திய உச்சநீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியுமான நீதிபதி [டாக்டர்] அரிஜித் பசாயத் இந்த விருதை வழங்கினார்.

சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு விருதுகள்

ராமசாமி ராஜா நகர், ஆலத்தியூர் மற்றும் அரியலூர் தொழிற்சாலைகள், இந்திய தொழில் கூட்டமைப்பால் வழங்கப்படும் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு மேலாண்மைக்கான விருதுகளைப் பெற்றுள்ளன. இது நான்கு நட்சத்திர மதிப்பீட்டைக் கொண்ட விருதாகும்.

தேசிய பாதுகாப்பு கவுன்சிலின் தமிழ்நாடு கிளை 2016-ம் ஆண்டுக்கு ஆலத்தியூர் தொழிற்சாலைக்கு, சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக்கான பாராட்டு விருது [Appreciation Award for Health and Safety] வழங்கியது.

அதே அமைப்பு ராம்கோ செங்கல்பட்டு அரைக்கும் ஆலைக்கு சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக்கான நட்சத்திர விருது [Star Award for Health and Safety] வழங்கியது.

TIONAL CONCLAVE ON MINES & MINERALS

ஆலத்தியூர் ஆலை

அரியலூர் ஆலை

ராம்கோ தொழிலாளர்களின் சமூக அக்கறை

எந்த ஒரு நிறுவனமும் சமுதாயத்தின் ஒரு அங்கமாக இருந்து செயல்படுவதே அதன் நீடித்த செயல்பாட்டிற்கான சரியான வழியாகும். ராம்கோ நிறுவனம், சமுதாயப் பணிகளில் தன்னுள்ள மிகுந்த அக்கறையோடும், சமூகச் சேவைகள் குறித்த பொறுப்புணர்வோடும் செயலாற்றி வருகிறது.

ராம்கோ சிமெண்ட் ஆலையின் தொழிலாளர்களும் அவ்விதமே தங்களை சமுதாய பணிகளில் மிகுந்த அக்கறையோடும் அர்ப்பணிப்போடும் இணைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தியாவின் எந்த ஒரு மூலையில் இயற்கை சீற்றத்தின் காரணமாக பொதுமக்கள் பாதிக்கப்பட்டாலும், ஓடோடிச் சென்று உதவி செய்வதில் ராம்கோ சிமெண்ட் ஆலைத் தொழிலாளர்கள் ஒருபோதும் தயக்கம் காட்டியதேயில்லை.

புயல்கால உதவி நிதி...

2011-ஆம் ஆண்டில் தானே புயலால் கடலூர் மாவட்டம் மற்றும் புதுச்சேரி மாநிலத்தின் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ராம்கோ ஆலைத் தொழிலாளர்கள் மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். அதேபோல், 2015-ஆம் ஆண்டில் வந்த புயலால் சென்னையின் பல பகுதிகளிலுள்ள மக்கள் பெரும் துயரங்களுக்கு ஆளான போது, தங்களாலான பங்களிப்பை உடனடியாகச் சென்று வழங்கினார்கள்.

2018-ஆம் ஆண்டில் தஞ்சாவூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்கள், கஜா புயலால் பாதிக்கப்பட்டன. இந்த புயலின் தாக்குதலால் வீடிழந்து, உடமைகள் இழந்து நின்ற மக்களுக்கு தேவையான அடிப்படை உதவிகளை ராம்கோ ஆலைத் தொழிலாளர்கள் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று நேரடியாக வழங்கினார்கள்.

ராம்கோ ஆலைத் தொழிலாளர்களின் சீரமைப்புக்குப் பின்.

சுத்தப்படுத்திய பின் அரசுப் பள்ளியின் எழில்மிகு அழகுத் தோற்றம்.

வித்யா மந்திர் பள்ளி, அரியலூர்.

நாட்டிலேயே சிறந்த தனியார் ஐடிஐ-களில் அரியலூர் பிஏசி ராமசாமி ராஜா ஐடிஐ நிறுவனம் மூன்றாம் இடம் பிடித்து சாதனைப் படைத்துள்ளது.

முக்கியமாக கிராமப்புறங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு பயன்படும் வகையில் ராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவனம் தனது தொழிற்சாலைகள்/சுரங்கங்கள் இருக்கும் பகுதிகளில் பின்வரும் கல்வி நிறுவனங்களை நடத்துகிறது.

கல்வி நிறுவனத்தின் பெயர்	அமைவிடம்	வாரியம்	வகுப்புகள்	மாணவர் எண்ணிக்கை
ராம்கோ வித்யாலயா	ராமசாமிராஜாநகர்	சிபிஎஸ்இ	எல்.கே.ஜி முதல் 12-ம் வகுப்பு வரை	1398
வித்யா மந்திர் பள்ளி	அரியலூர்	சிபிஎஸ்இ	எல்.கே.ஜி முதல் 12-ம் வகுப்பு வரை	1213
வித்யா மந்திர் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி	ஆலத்தியூர்	மெட்ரிகுலேஷன்	எல்.கே.ஜி முதல் 12-ம் வகுப்பு வரை	1537
வித்யாமந்திர் நர்சரி மற்றும் தொடக்கப் பள்ளி	புத்தூர்	மெட்ரிகுலேஷன்	எல்.கே.ஜி முதல் 8-ம் வகுப்பு வரை	789
ஸ்ரீமதி லிங்கம்மாள் வித்யா மந்திர் பள்ளி	ஜெயந்திபுரம்	சிபிஎஸ்இ	எல்.கே.ஜி முதல் 10-ம் வகுப்பு வரை	588
பி.ஏ.சி.ராமசாமிராஜா தனியார் தொழிற்பயிற்சி நிலையம்	அரியலூர்	என்சிவிடி		318
			மொத்தம்	5843

பிஞ்சில் விதைத்தது பலன் தந்தது...

'நாளைய தலைவர்களான இன்றைய மாணவர்களின் மனங்களில் ஊன்றப்படும் நல் விதைகளால் நாளைய சமுதாயம் தழைத்தோங்கும்' என்ற முன்னாள் குடியரசுத் தலைவர் ஆ.ப.ஜெ. அப்துல்கலாம் அவர்களின் வாக்கிற்கேற்ப, எந்தவொரு நல்ல மாற்றத்தையும் முதலில் குழந்தைகளிடமிருந்து தொடங்குவது நல்ல பலனைத் தரும்.

பள்ளிகளிலிருந்தே மாணவ-மாணவிகளின் சிந்தனையில் நல்லொழுக்கத்தையும் நல்ல எண்ணங்களை உருவாக்கும் நோக்கில், வகுப்பறைக்கு வெளியே காலணிகளை வரிசையாக வைத்தல், பள்ளியிலுள்ள அறைகளில் அமைந்திருக்கும் பயன்பாட்டை எழுதி வைத்தல், பொருட்கள் வைக்கும் இடத்தில் அவற்றின் பெயர்களை எழுதி வைத்தல்... போன்ற சின்னச் சின்ன செயல்களிலிருந்து பள்ளிக் குழந்தைகளின் பங்களிப்பை உண்டாக்கினர்.

இந்த நடைமுறை பள்ளியில் சிறப்பாக செயல்படத் தொடங்கியது. இது மற்றும் மெல்ல மெல்ல பள்ளியில் படிக்கும் குழந்தைகளின் வீடுகளை நோக்கியும் நல் ஆரோக்கிய பயணத்தைத் தொடங்கியது. இன்றைக்கு பள்ளியில் படிக்கும் பெரும்பாலான குழந்தைகளின் வீடுகளில் பெயரை எழுதி வைக்கும் நடைமுறை நல்ல பழக்கமாகத் தொடர்கிறது.

"முன்னெல்லாம் வீட்டுல கண்ட கண்ட இடத்தில பொருளை வீசிப் போட்டுட்டு, தேவைப்படும்போது எங்கே போட்டோம்னு தெரியாம தேடிக்கிட்டேயிருப்போம். இப்ப எங்க புள்ளைக இப்படி எழுதி வச்சதாலே, வீட்டுல எல்லாப் பொருளும் அதுக்கான இடத்திலே இருக்கு. தேடுற நேரமும் மிச்சமாகுது. வீடும் சுத்தமாயிருக்கு..!" என்கிறார் பத்தாம் வகுப்பு படிக்கும் சிநேகாவின் தாய் அஞ்சலை.

வகுப்பில் கற்ற ஒழுங்கினை தங்களது வீடுகளிலும் செயல்படுத்திய அழகுக் காட்சி.

இந்த ஒரு சிறு ஒளி, தொடரும் நாட்களில் பேரொளியாய் எங்கும் பற்றிப் பரவட்டும்.

என்றென்றும் தொடரும் எங்கள் பணிகள்

பி.ஆர்.வெங்கட்ராமராஜா
சேர்மன், ராம்கோ குழுமம்

ஏ.வி.தர்மகிருஷ்ணன்
தலைமைச் செயல் அதிகாரி,
தி ராம்கோ சிமெண்ட்ஸ் லிமிடெட்

தங்களது சிறப்பான பணிகளுக்காக அரசு மற்றும் பல தன்னார்வ நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட ராம்கோ சிமெண்ட் நிறுவனத்தின் திரு.ஏ.வி.தர்மகிருஷ்ணன் அவர்களிடம் பேசியபோது அவர் கூறியதாவது: குழந்தைகளின் கல்வி, சிறப்பான பயிற்சி, திறன் மேம்பாட்டுத் திட்டங்களும் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் பசுமைச் செயல்பாட்டுத் திட்டங்களும் ஆலையைச் சுற்றியுள்ள சமுதாய மக்களின் முன்னேற்றத்திற்கான செயல்பாடுகளைச் சிறப்பாக செயல்படுத்தியதற்காகவும் பல விருதுகளை பெற்றதில் ராம்கோ சிமெண்ட் நிறுவனம் மகிழ்ச்சியடைகிறது.

62-ஆவது ஆண்டில் தொடரும் வெற்றிப் பயணம்

தமிழகத்தின் தென்கோடியிலுள்ள இராஜபாளையத்தில் தொடங்கப்பட்ட இந்த சிமெண்ட் நிறுவனம், இன்றைக்கும் இந்திய மக்கள் அனைவருக்கும் தனது சிறப்பான தயாரிப்பை பெருமகிழ்வோடு வழங்கி வருகிறது. இந்தியாவெங்கும் 11 சிமெண்ட் உற்பத்தி ஆலைகளும், தமிழகத்தில் 5 சிமெண்ட் உற்பத்தி ஆலைகளோடும் தனது 62-ஆவது ஆண்டில் உறுதியோடும் நம்பிக்கையோடும் வெற்றி பயணம் வருகிறது. ராம்கோ சிமெண்ட் தனது ஆலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் வாழ்க்கைத் திறன் உயர்வு, ஆலை செயல்படும் பகுதியில் வசிக்கும் மக்களின் சுகாதார மேம்பாடு, அங்குள்ள குழந்தைகளின் கல்வியில் முன்னேற்றம், சுத்தமான கழிப்பறை, சுகாதாரமிக்க கழிப்பறை, குடிநீர் வசதி, மின் வசதி, சாலை வசதி என சமுதாயத்தின் வளர்ச்சிக்கான பல்வேறு செயல்பாடுகளையும் தொலைநோக்குப் பார்வையோடு செயல்படுத்தி வருகிறது.

ஆறு சிறப்புத் தன்மைகள்

சாதாரண சிமெண்ட் வகைகளிலிருந்து ராம்கோ சூப்பர் கிரேடு சிமெண்ட், ஆறு முக்கிய சிறப்புத்தன்மைகளை உடையது. அவை என்ன... ஆறு சிறப்புத்தன்மைகள்..?

1. நாளாக நாளாக கூடிக்கொண்டே போகும் அதிக வலிமை
2. விரிசல்களிலிருந்து பாதுகாப்பு
3. கம்பிகள் துருப்பிடிப்பதிலிருந்து பாதுகாப்பு
4. சல்பேட் தாக்குதலிலிருந்து பாதுகாப்பு
5. கசிவுகளிலிருந்து பாதுகாப்பு
6. மழை மற்றும் பிற வானிலைகளிலிருந்து பாதுகாப்பு

தரம், உறுதி, நீடித்த உழைப்பு தரும் சிமெண்ட்டை தயாரித்து, அதனை அனைவருக்கும் வழங்க வேண்டுமென்கிற உயரிய நோக்கத்துடன் 1957-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது தி ராம்கோ சிமெண்ட் லிமிடெட் நிறுவனம். பெருமைக்குரிய இந்நிறுவனத்தை தொடங்கியவர் திருமிகு. P.A.C.ராமசாமி ராஜா அவர்கள்.

5S விருது பெற்ற தமிழகத்தின் முதல் பள்ளி

அரியலூர் மாவட்டத்தில் செயல்படும் ராம்கோ சிமெண்ட் ஆலையைச் சுற்றியுள்ள பகுதிகளிலுள்ள அரசுப் பள்ளிகளின் மேம்பாட்டிற்காக பல்வேறு செயல்களைச் செய்து வருகிறது இந்நிறுவனம். அவற்றுள் குறிப்பிடத்தக்கது 5S திட்டமாகும்.

செய்பிரி (SORT), செய்நிரல் (SET IN ORDER), செய்மிளிர் (SUPER CLEAN), செய்திடம் (STANDARDIZE), சீர்மிகு (SUSTAIN) என ஐந்து முக்கிய அம்சங்களை ஆதாரமாகக் கொண்டு, அரசு பள்ளிகளின் கல்வி மற்றும் கற்றல் சுகாதாரத்தை மேம்படுத்தும் செயல்திட்டங்களை முன்னெடுத்துச் செய்து வருகிறது ராம்கோ சிமெண்ட்.

இதன் தொடர் செயல்பாடு காரணமாக, தமிழகத்திலேயே முதன்முதலாக 5S தரச்சான்று பெற்ற பள்ளி என்கிற பெருமையை கோவிந்தபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி பெற்றுள்ளது. அதுமட்டுமில்லாமல், மாணவ-மாணவிகள் நவீன அறிவியல் தொழில்நுட்பங்களுடன் படிக்கும் சூழலை உருவாக்கும் வகையில், smart board வசதியுடன் கூடிய smart class வகுப்பறையும் ராம்கோ நிர்வாகத்தால் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், பத்தாம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வுகளில் இப்பள்ளிகளில் படிக்கும் மாணவ-மாணவிகள் மாநில மற்றும் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண் பெற்று அப்பள்ளிக்கும் மாவட்ட கல்வி அலுவலருக்கும், ராம்கோ சிமெண்ட் நிர்வாகத்திற்கும் பெருமை தேடித் தருகிறார்கள்.

பிளஸ் 2 பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்றவர்கள்

எம்.தவமணி

ஸ்ரீ.காயத்ரி

கே.கிருத்திகா

வாழ்வில் முன்னேற ஒளிகாட்டும் கல்வி

ஒவ்வொரு தனிமனிதனின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கும் கல்வி மிகவும் அவசியம். தரமான கல்வி அனைவருக்கும் கிடைக்க வேண்டுமென்கிற எண்ணமுடைய ராம்கோ சிமெண்ட், தமிழகத்தில் தனது ஆலைகள் இயங்கும் 5 இடங்களில் பள்ளிகளை சிறந்த முறையில் நடத்தி வருகிறது. இப்பள்ளிகளில் பயிலும் எளிய குடும்பப் பின்னணிகளைக் கொண்ட கிராமப்புறக் குழந்தைகளுக்கும் பெரிய நகரங்களில் வசிக்கும் குழந்தைகளுக்குக் கிடைக்கும் கல்வியைப் போன்றதொரு தரமான கல்வியை வழங்கி வருகிறது.

'கேட்டேன்... மறந்துபோனேன்.
பார்த்தேன்... நினைவில் வைத்துக்கொண்டேன்.
செய்து பார்த்தேன்... கற்றுக்கொண்டேன்...' என்னும் அனுபவ வரிகளுக்கேற்ப, குழந்தைகள் அனைவரும் செய்து பார்த்து கற்றுக்கொள்ளும் வகையிலான வேதியியல் மற்றும் வேறு அறிவியல் ஆய்வுக்கூடங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

Edited, Printed and Published by R. Muthu Kumar at No. 1, First Main Road, United India Colony, Kodambakkam, Chennai-600 024 and printed at Print House, 1 First Main Road, United India Colony, Kodambakkam, Chennai 600024 on behalf of M/s. Newsmen Associates Limited.
நிர்வாகம், விளம்பரம், சர்குலேஷன் போன்: 24733900, 24733910, E–mail : makkalkural@gmail.com, ஆசிரியர் குழு: 24734700, பேக்ஸ்: 24732700, 24735700 இமெயில்: makkalkural.news@gmail.com நிறுவன ஆசிரியர்: எம். சண்முகவேல்